بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *01/11/2024* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**அகழ்ப் போரின் பின்னணியில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

பனூ குறைஸா போரின் மேற்கொண்ட விவரம் இவ்வாறு உள்ளது: இந்தப் போரில் ஹஸ்ரத் ஃஹல்லாத் பின் சுவைது (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் முன்ஸிர் பின் முஹம்மத் (ரலி) அவர்கள் ஆகிய இரு முஸ்லிம்கள் ஷஹீது ஆனார்கள். ஆனால், பனூ குறைஸா கோத்திரத்தின் யூதர்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை பற்றியோ கருத்து வேறுபாடு இருக்கின்றது. பல்வேறு அறிவிப்புகளில், அறுநூறு முதல் தொள்ளாயிரம் வரையிலான எண்ணிக்கை எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆனால், ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் ஆய்வுக்கு ஏற்ப எழுதுகிறார்கள்: அன்றைய நாள் சஅது (ரலி) அவர்களது தீர்புக்கு ஏற்ப ஏறத்தாழ நானூறு பேர் கொல்லப்பட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஹாபாவுக்குக் கட்டளையிட்டு, அந்தக் கொலையுண்டவர்களைத் தமது ஏற்பாட்டில் நல்லடக்கம் செய்ய வைத்தார்கள். இஸ்லாத்தின் எதிரிகள் மிகைப்படுத்தும் அளவுக்கு எண்ணிக்கையை எடுத்துக் கூறி இஸ்லாத்தை அநீதியிழைக்கும் மார்க்கம் எனக் கூறுகிறார்கள்.

இக்காலத்தின் ஓர் அஹ்மதி அறிஞர் சய்யித் பரக்காத் சாஹிப் என்பவர் "ரஸூலே அக்ரம் (ஸல்) அவ்ர் யஹூத் ஹெஜாஸ் (அதாவது, எல்லாரையும் விட கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களும் ஹெஜாஸின் யூதர்களும்)" என்ற தமது நூலில் பெரிதும் ஆய்வு செய்து இவ்வாறு எழுதியுள்ளார்: கண்களை மூடிக் கொண்டு எல்லா அறிவிப்புகளையும் ஏற்றுக் கொண்டே செல்வது ஒன்றும் புத்திசாலித்தனம் இல்லை. மிகவும் அதிகமாக மிகைப்படுத்தி ஒன்றும் கூறப்படவில்லையே என்று இந்த அறிவிப்புகளில் மீண்டும் ஆழ்ந்து சிந்தனை செய்து பார்க்க வேண்டும்.

இவரது ஆய்வுக்கு ஏற்ப பனூ குறைஸா போரில் கொல்லப்பட்ட யூதர்களின் எண்ணிக்கை இருபதுக்கு மேற்பட்டதல்ல. இவர் இன்னும் அதிகம் குறைத்து விட்டார். இது எந்த அளவுக்கு அறிவுப்பூர்வமான அம்சத்தைக்

கொண்டது என்று தெரியவில்லை! எவ்வாறாயினும், இவருடைய சில விஷயங்கள் அறிவுப்பூர்வமானவையாகும். அவற்றை ஆய்வில் அடிப்படையாக எடுத்துக் கொள்ளலாம்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் பனூ குறைஸா போரில் கொல்லப்பட்ட யூதர்களின் எண்ணிக்கை மீது செய்யப்படும் முஸ்லிம் அல்லாத வரலாற்றாசிரியர்களின் ஆட்சேபனைகளுக்கு பதில் அளிக்கும் போது இவ்வாறு கூறினார்கள்:** பனூ குறைஸாவின் சம்பவம் தொடர்பாக முஸ்லிம் அல்லாத சில வரலாற்றாசிரியர்கள் முற்றிலும் விரும்பத்தகாத முறையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராகத் தாக்குதல் தொடுத்துள்ளார்கள். சற்றேறக்குறைய இந்த நானூறு யூதர்களது மரண தண்டனையின் காரணமாக, பெருமானார் (ஸல்) அவர்களை அநீதி அக்கிரமம் இழைக்கும் ஓர் ஆட்சியாளராக முன் வைத்துள்ளார்கள். நவூதுபில்லாஹ் (அவ்வாறு கூறுவதை விட்டும் நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்).

இந்த ஆட்சேபனை மதச்சார்பை அடிப்படையாகக் கொண்டது. சில முஸ்லிம்களும் இவர்களது தாக்கத்திற்கு உள்ளாகி விட்டார்கள். இந்த ஆட்சேபனைக்கு பதிலில், முதலில் இந்த விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். பனூ குறைஸா தொடர்பான எந்தத் தீர்ப்பை அநீதியானது என்று கூறப்படுகிறதோ அது ஹஸ்ரத் சஅது பின் முஆஸ் (ரலி) அவர்களின் தீர்ப்பாகும். அது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது தீர்ப்பே இல்லாத போது, அதன் காரணமாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனை செய்திட முடியாது. இரண்டாவது, முன் வந்த நிலைமைக்கு ஏற்ப இந்தத் தீர்ப்பு ஒருபோதும் தவறானதாக, அநியாயமானதாக இருக்கவில்லை.

மூன்றாவது விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்கள் தீர்ப்பை அறிவிப்பதற்கு முன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் பெற்ற வாக்குறுதியின் காரணமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எந்நிலையிலும் அதன்படி அமல் செய்வதற்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்தார்கள். நான்காவது விஷயம் என்னவென்றால், குற்றவாளிகள் தாங்களே இந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டார்கள்; அதில் ஆட்சேபனை செய்யவில்லை. எடுத்துக்காட்டாக, ஹுயை பின் அஃஹ்தப் கொல்லப்பட்ட நேரத்தில் அவர் கூறிய சொற்களிலிருந்து, அதை அவர் தனக்கு இறைநியதியாகக் கருதியது தெரிய வருகிறது. ஆக, இந்த நிலையில், தேவையில்லாமல் அதில் தலையிட எழுந்து நிற்பது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வேலையாக இருக்கவில்லை.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது ஆட்சி அமைப்பின் கீழ் இந்தத் தீர்ப்பை எப்படி அமல்படுத்தினார்கள் என்றால், அதைக் கருணை மற்றும் பரிவிற்கான மிகச் சிறந்த முன்மாதிரியாகப் புரிய முடியும். ஹஸ்ரத்

சஃது (ரலி) அவர்களின் தீர்ப்புக்குப் பிறகு இந்த விவகாரத்துடன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இந்த அளவு மட்டுமே தொடர்பு இருந்தது. எனவே, பனூ குறைஸாவின் சம்பவம் தொடர்பாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஒருபோதும் எந்த ஆட்சேபனையும் செய்யப்பட முடியாது. மாறாக, உண்மை என்னவென்றால், இந்த சம்பவம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கம், அழகிய நிர்வாகம் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இயல்பான கருணை மற்றும் பரிவிற்கான மிகவும் தெளிவான ஒரு சான்றாகும்.

இப்பொழுது அசல் தீர்ப்பைப் பற்றிய கேள்வி இருக்கிறது. எனவே, வரலாற்றிலிருந்து தெரிய வருவதாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அப்பொழுது மதீனாவில் வாழ்ந்து வந்த யூதர்களின் மூன்று கோத்திரங்களான பனூ கைனுகா, பனூ நஸீர் மற்றும் பனூ குறைஸாவுடன் அமைதி மற்றும் சமாதானத்துக்கான ஓர் உடன்படிக்கை செய்தார்கள். அதற்கேற்ப முஸ்லிம்களும் யூதர்களும் அமைதியாகவும், நிம்மதியாகவும் மதீனாவில் வாழ வேண்டும். ஒருவர் மற்றவருடன் நட்பு ரீதியிலான தொடர்பைக் கொண்டிருக்க வேண்டும். ஒருவர் மற்றவரின் எதிரிகளுக்கு எவ்வித உதவியும் புரியக் கூடாது. ஏதாவது வெளிக் கோத்திரம் அல்லது கோத்திரங்கள் தரப்பிலிருந்து மதீனா மீது தாக்குதல் ஏதும் தொடுக்கப்பட்டால், அனைவரும் ஒன்று சேர்ந்து அதை எதிர்கொள்ள வேண்டும். உடன்படிக்கை செய்பவர்களில் யாராவது ஒருவரோ அல்லது குழுவோ இந்த உடன்படிக்கையை மீறினாலோ அல்லது கூச்சல் குழப்பத்துக்குக் காரணமாக அமைந்தாலோ மற்றவர்களுக்கு அவருக்கு எதிராக கையை உயர்த்துவதற்கு அதிகாரம் இருக்கும். எல்லாக் கருத்து வேறுபாடுகளும் முரண்பாடுகளும் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு முன்னால் எடுத்து வைக்கப்பட வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வழங்கும் தீர்ப்பை அனைவரும் அமல்படுத்த வேண்டும். ஆனால், ஒவ்வொரு நபர் அல்லது சமுதாயம் தொடர்பாகவும் அவரது மதத்துக்கு ஏற்ப, அவரது மதச்சட்டத்துக்கு ஏற்பவே தீர்ப்பு வழங்கப்படுவது அவசியமாகும்.

இந்த ஒப்பந்தத்தை எல்லாருக்கும் முதலாக பனூ கைனுகா கோத்திரம் மீறியது. மேலும், முஸ்லிம்களுடன் போருக்கான வித்திட்டது. ஆனால், அவர்கள் முஸ்லிம்கள் முன் தோல்வியைத் தழுவிய போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களை மன்னித்து விட்டார்கள். மேலும், நகரத்தின் அமைதியும் சீர்குலையக்கூடாது; முஸ்லிம்களும் அவர்களது தீங்கிலிருந்து பாதுகாப்பாகிட வேண்டும் என்பதற்காக அவர்களை நாடு கடத்துவதை மட்டுமே போதுமானதாகக் கருதினார்கள்.

அதிக காலம் கடந்திருக்காது; யூதர்களின் இன்னொரு கோத்திரமான பனூ நஸீரும் தலை தூக்கியது. எல்லாருக்கும் முதலாக அவர்களுடைய ஒரு

தலைவன் கஅப் பின் அஷ்ரஃப் உடன்படிக்கையை மீறி குறைஷியர்கள் மற்றும் மற்ற கோத்திரங்களுடன் முஸ்லிம்களுக்கு எதிராக சதி திட்டம் தீட்டத் துவங்கினான். கடைசியில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் கொல்வதற்கு சதி செய்தான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையால் இந்த மனிதன் தனது இறுதி முடிவை எட்டியதும், அவனது கோத்திரம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் கொல்லத் திட்டம் தீட்டியது. அவர்களது கொலை வெறி எண்ணத்தைப் பற்றி தெரிய வந்ததும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களை எச்சரிப்பதற்கும், அவர்களை தண்டிப்பதற்கும் வழிமுறையை மேற்கொண்டார்கள். அப்பொழுது அவர்கள் முஸ்லிம்களுடன் போர் புரிய ஆயத்தமாகி விட்டனர். அந்தப் போரில் பனூ குறைஸா கோத்திரம் அவர்களுக்கு உதவி புரிந்தது.

பனூ நளீர் தோல்வியடைந்ததும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பனூ குறைஸாவையோ முற்றிலும் மன்னித்து விட்டார்கள். பனூ நளீர் கோத்திரத்துக்கு அமைதியாகவும், நிம்மதியாகவும் மதீனாவில் இருந்து சென்று விடுவதற்கான அனுமதி வழங்கினார்கள். இந்தப் பெரும் கருணைக்கு பனூ நளீர் செய்த கைமாறு என்னவெனில், மதீனாவில் இருந்து வெளியே சென்று பல்வேறு அரபுக் கோத்திரங்களுடன் சேர்ந்து கொண்டு, ஒரு மாபெரும் படையை மதீனா மீது தாக்குதல் தொடுக்கக் கொண்டு வந்தார்கள். மேலும், இஸ்லாத்தை மண்ணோடு மண்ணாக்காத வரை திரும்பிச் செல்ல மாட்டோம் என்று அனைவரிடமும் உறுதியான வாக்குறுதி பெற்றார்கள்.

மூவாயிரம் முஸ்லிம்கள் முற்றிலும் போர்த்தளவாடங்கள் அற்றவர்களாக, இயலாமையின் நிலையில் காஃபிர்களின் 10, 15 ஆயிரம் பேரைக் கொண்ட இரத்த வெறி கொண்ட பயங்கரமான மாபெரும் படையால் சூழப்பட்டு, மரணம் அவர்களுக்குக் கண் முன் தென்பட்டுக் கொண்டிருந்தது. சரியாக அந்த நேரத்தில், இத்தகைய ஆபத்தான தருணத்தில், யூதர்களின் மூன்றாவது கோத்திரமான பனூ குறைஸா நம்பிக்கை துரோகம் செய்தனர். பனூ குறைஸா முஸ்லிம் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது பின்பக்கம் இருந்து தாக்குதல் தொடுக்கத் துவங்கி விட்டனர். பனூ குறைஸாவின் இந்த செயல் ஓர் உடன்படிக்கை மீறுதலாக, நம்பிக்கை துரோகமாக மட்டுமே இல்லாமல், அதையும் தாண்டி ஒரு பயங்கரமான கிளர்ச்சியாக இருந்தது.

இத்தகைய நிலையில், அவர்களது உடன்படிக்கை மீறல், நம்பிக்கை துரோகம், கிளர்ச்சி மற்றும் கொலை நடவடிக்கை ஆகிய குற்றங்களுக்கு அவர்களுக்கான தண்டனையாக, அவர்களுக்கு வழங்கப்பட்டதைத் தவிர வேறு என்ன தண்டனை இருந்திருக்க முடியும்?

சாத்தியமான முறையில், மூன்று தண்டனைகளை மட்டுமே வழங்கியிருக்க முடியும் என்பது வெளிப்படையான விஷயம். முதலாவது, மதீனாவிலேயே சிறைபிடிப்பது அல்லது தடுப்புக் காவலில் வைத்திருப்பது. இரண்டாவது, நாடு

கடத்துவது. மூன்றாவது, போர்வீரர்களைக் கொன்று விட்டு, மற்றவர்களை சிறைபிடிப்பது அல்லது தடுப்புக் காவலில் வைப்பது.

முதல் தண்டனையை எடுத்துக் கொள்வோம்! அந்தக் காலத்தின் அடிப்படையில் ஓர் எதிரி சமுதாயத்தைத் தமது நகரத்திற்குள் சிறைபிடித்து வைப்பது பற்றிய பேச்சுக்கே இடமிருக்கவில்லை. ஏனென்றால், குழப்பம் விளைவிப்பதற்கு, கலகம் செய்வதற்கு, தீங்கிழைப்பதற்கு, இரகசியமாகத் திட்டம் தீட்டுவதற்கு ஆகியவற்றுக்காக அவர்களுக்கு அதற்கு முன்னால் இருந்த அதே சுதந்திரம் கிடைத்திருக்கும். மறுபுறம், அவர்களுடைய செலவுகளுக்கான பொறுப்பு முஸ்லிம்கள் மீது வந்திருக்கும். அதை ஏற்றுக் கொள்வற்கு அவர்களுக்கு ஒருபோதும் ஆற்றல் இருக்கவில்லை.

இரண்டாவது தண்டனையை எடுத்துக் கொள்வோம்! அதாவது, நாடுகடத்துதல். அதாவது, யூதர்களுக்கு மதீனாவிலிருந்து வெளியே சென்று விடுவதற்கான அனுமதி அளித்து விடுவது. இதனால் இஸ்லாத்தின் எதிரிகளில், செயல்தீரம் மிக்கவர்களான, போர்த்திறன் கொண்டவர்களான மக்களின் எண்ணிக்கை அதிகரித்து விடுவது மட்டுமல்லாமல், அதற்கும் மேற்பட்டு, இஸ்லாத்தின் எதிரிகளின் படையில் எப்படிப்பட்ட மக்கள் சென்று சேர்ந்து விடுவார்கள் என்றால், அவர்கள் தமது பயங்கரமான ஆத்திரமூட்டுதல், எதிர்ப்புப் பரப்புரை செய்தல், இரகசிய மற்றும் சதிதிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் ஆகியவை காரணமாக இஸ்லாத்திற்கு எதிரான எல்லாத் திட்டங்களுக்கும் தலைவராக வேண்டும் என்று அமைதியிழந்திருந்தனர். அந்தக் காலத்தின் நிலைமைகள் அடிப்படையில் முஸ்லிம்களின் இந்த செயல் ஒருபோதும் தற்கொலையை விடக் குறைவானதாக இருந்திருக்காது.

ஆனால், எதிரியை உயிரோடு வைத்திருப்பதற்காக தான் தற்கொலைக்கு இணங்கக்கூடிய சமுதாயம் ஏதும் முழுவுலகிலும் உள்ளதா? இல்லையென்றால், நிச்சயமாக இந்தக் காரணத்திற்காக, முஸ்லிம்கள் மீதும் குற்றம் சாட்ட முடியாது. எனவே, இவ்விரு தண்டனைகளும் சாத்தியமற்றவையாக இருந்தன. இவற்றில் எது ஒன்றை மேற்கொள்வதும், தம்மைத்தாமே உறுதியான அழிவில் ஆழ்த்திக் கொள்வதாக இருந்தது. மேலும், இவ்விரு தண்டனைகளையும் விட்டுவிட்டு, மேற்கொள்ளப்பட்ட அந்த ஒரு வழி மட்டுமே திறந்திருந்தது. இதன் காரணமாகவே, ஒருபோதும் இஸ்லாத்தின் நண்பர்களைச் சேராதவரான மார்கோலஸ் போன்ற வரலாற்றாசிரியர்கூட, இந்த சந்தர்ப்பத்தில், 'ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்கள் வழங்கிய தீர்ப்பு சூழ்நிலையின் கட்டாயத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது; அதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை' என்பதை ஒப்புக் கொள்ளும் நிர்பந்தத்திற்காளாகி விட்டார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் யூதர்களுக்கிடையிலான உடன்படிக்கையில் இந்தவொரு நிபந்தனையும் இருந்தது. அதாவது, யூதர்கள் தொடர்பாக தீர்ப்பு வழங்க வேண்டிய விவகாரம் ஏதும் வந்தால், அதற்கான

தீர்ப்பு அவர்களுடைய ஷரீஅத் அடிப்படையிலேயே வழங்கப்படும். தவ்ராத்தில் பார்வையை செலுத்தினோம் என்றால், அங்கு பனூ குறைஸா செய்த இது போன்ற குற்றங்களுக்கு, ஹஸ்ரத் ஸஃது பின் முஆஸ் (ரலி) அவர்கள் பனூ குறைஸாவுக்குக் கொடுத்த அதே தண்டனைதான் எழுதப்பட்டுள்ளது. கருத்தின் சுருக்கம் என்னவென்றால், ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களின் தீர்ப்பை அதைப் பொருத்தமட்டில் கடுமையானதாகக் கருதப்படலாம். ஆனால், அது நீதி, நியாயத்துக்கு எதிரானதாக ஒருபோதும் இருந்ததில்லை. மேலும், இந்தத் தீர்ப்பு சரியாக யூத ஷரீஅத்துக்கு ஏற்ப இருந்தது.

ஆனால், எதுவாக இருந்திருந்தாலும் சரி! இந்தத் தீர்ப்பு ஹஸ்ரத் ஸஃது பின் முஆஸ் (ரலி) அவர்களின் தீர்ப்பாக இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தீர்ப்பாக இருக்கவில்லை. அரசாங்கத்தின் தலைவர் என்கிற முறையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்தத் தீர்ப்பை தமது அரசாட்சியின் ஏற்பாட்டின் கீழ் அமல்படுத்தும் அளவுக்கு மட்டுமே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இதில் தொடர்பு இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதை எப்படி அமல்படுத்தினார்கள் என்றால், அதை நாம் தற்காலத்தின் அதி நாகரீகமான, பெரும் கருணையுள்ள அரசாங்கத்துக்கும் ஒரு சிறந்த முன்மாதிரியாகப் புரியலாம்.

இது இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்யக்கூடிய இன்றைய காலத்து மக்களுக்கான பதிலாகும். அந்த ஆட்சேபனையின் விளைவாக நம்முடைய சில மக்கள் பாதிப்புக்குள்ளாகிறார்கள். பனூ குறைஸா சம்பவத்தை சான்றாகக் கொண்டு, பாலஸ்தீனர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையும் நியாயப்படுத்துகிறார்கள். ஆனால், இப்பொழுது அதற்கு இருக்கும் நிலைமைக்கோ இன்றைய காலத்தின் நிலைமைகளோடு எந்த ஒப்பீடும் இல்லை. எவ்வாறாயினும், இந்த அனைத்துத் தவறுகளும் முஸ்லிம்கள் உடையதுதான். அவர்கள் தங்கள் சுய இலாபத்துக்காக இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தி வைத்துள்ளார்கள். மேலான அல்லாஹ் இவர்களுக்கும் அறிவை வழங்குவானாக! ஆமீன்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ. وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا.

مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهُ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ. وَنَشْهَدُ أَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ. عِبَادَ اللّٰهِ

رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ

اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)